DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
-----
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, ATTUR.

| | | | |
|---|---|---|---|
| CC / STC. No | .. .. **CC. 68/2025** | | |
| Deposition of Witness for | PW 1<br>Prosecution<br>Court | | |
| Name | : **திருமதி. சரோஜா** | Taluk | : பெத்தநாயக்கன்பாளையம் |
| Father/Husband Name | : க.பெ மாணிக்கம் | Calling | : விவசாயம் |
| Village | : படுவுகாடு | Age | : 71 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 22.10.2025.

**1 முதல் 5 எதிரிகள் ஆஜர், எதிரிகளின் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். சாட்சி முன்னிலை. உறுதிமொழி எடுக்கப்பட்டது. முதல் விசாரணை**

**துவக்க நேரம்** 12.49

1) நான் மேற்கண்ட முகவரியில் வசித்து, விவசாய வேலை செய்து வருகிறேன். எதிரிகளை தெரியும், எனது பக்கத்து காட்டுக்காரர்கள் ஆவார்கள்.

2) தேதி, மாதம் நினைவில்லை. சுமார் 1 வருடம் 3 மாதத்திற்கு முன்பு ஒருநாள் ஞாயிற்றுக்கிழமை அன்று மாலை சுமார் 04.00 மணியளவில் நானும், எனது மகன் பெரியசாமியும் எங்களது தோட்டத்தில் இருந்த தழைகளை வெட்டிக்கொண்டிருந்தோம்.

3) அப்பொழுது, ஆஜர் எதிரிகள் அனைவரும் எனது தோட்டத்திற்குள் அத்துமீறி உள்ளே நுழைந்து, கணேசனின் மகன் (பெயர் தெரியவில்லை), எனது மகனை கல்லால் குத்த வந்தார். நான் அதனை தடுக்க சென்றேன். உடனே, வேப்பங்கட்டையை எடுத்து, கணேசனின் மகன், எனது மகனின் தலையில் அடித்துவிட்டார். கணேசன் என்னுடைய முடியை பிடித்து, இழுத்து, கல்லால் எனது தலையில் குத்திவிட்டார். அதில் எனக்கு

தலையில் காயம் ஏற்பட்டு, ஏழு தையல் போடப்பட்டது.

4) எனது தலையில் இரத்தம் வருவதை எனது ஆடையில் பிடித்து, அழுத்திக்கொண்டேன். எனது மகன் பயந்து கொண்டு, வீட்டிற்குள் சென்று தாழ் போட்டுக்கொண்டார். நான் வாசற்படியில் நின்றுக்கொண்டிருந்தபோது, கணேசனின் மகன், வேப்பங்கட்டையால் எனது சோத்து கால் தொடையில் அடித்துவிட்டார்.

5) மேலும் ஆஜர் எதிரிகள் அனைவரும் கதவு, ஜன்னல் ஆகியவற்றை அடித்து, உடைத்துவிட்டார்கள். போலிசார் வந்துதான், காயம்பட்ட என்னையும், எனது மகனையும் 108 ஆம்புலன்ஸ் மூலம் பெத்தநாயக்கன்பாளையம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். நான் மருத்துவமனையில் இருந்தபோது, போலிசார் வந்து, சம்பவத்தை குறித்து, எழுதிக்கொண்டார்கள். அதில் நான் கையெழுத்து செய்தேன். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். (**புகார் வாக்குமூலம் அ.த.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகளின் தரப்பில் குறுக்குவிசாரணை**

1) நான் என்ன படித்துள்ளேன் என்றால் 4 ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் எத்தனை வருடங்களாக விவசாயம் செய்து வருகிறேன் என்றால் என்னுடைய சிறுவயதிலிருந்தே விவசாயம் செய்து வருகிறோம்.

2) ஆஜர் எதிரிகள் எனது காட்டிற்கு அருகில் சுமார் 15 வருடங்களுக்கு முன்னால் காடு வாங்கியுள்ளார்கள் என்றால் சரிதான். எதிரிகள் வாங்கிய நிலத்தை அளக்கும்போது, நான் அனுபவம் செய்தஇடமும் வந்தது என்றால் சரியல்ல. வேப்பமரம் எங்கள் இருவரின் காட்டிற்கு பொதுவான இடத்தில்தான் உள்ளது என்றால் சரியல்ல, என்னுடைய வரப்பில்தான் வேப்பமரம் உள்ளது. மேற்சொன்ன வரப்பு எங்கள் இருவருக்கும் பொதுவானது என்றால் சரியல்ல, அந்த வரப்பை நாங்கள்தான் கட்டினோம், அது எங்களுக்கு மட்டும்தான் சொந்தம். மேற்சொன்ன வேப்பமரம் சம்பந்தமாக எங்களுக்கும்,எதிரிகளுக்கும் இடையே சுமார் 15 வருடங்களாக பிரச்சனை

இருந்துவருகிறது என்றால் சரியல்ல, சுமார் 12 வருடங்களாக பிரச்சனை இருந்து வருகிறதுது. மேற்சொன்ன பிரச்சனை எங்கள் இருவருக்கும் வாய்தகராறு அடிக்கடி ஏற்படும் என்றால் சரிதான், எதிரிகள் மூன்று முறை வந்து என்னை அடித்துவிட்டார்கள்.

3) எதிரிகள் என்னை அடித்ததாக சொல்லும்பட்சத்தில், அதனை குறித்து போலிசாரில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. என்னுடைய வீட்டில் இருந்து, பெத்தநாயக்கன்பாளையம் அரசு மருத்துவமனைக்கு இருசக்கரவாகனத்தில் சென்றால், 15 நிமிடங்களில் செல்லமுடியும் என்றால் சரிதான்.

4) இந்த பிரச்சனை சம்பந்தமாக எதிரிகள், அவர்களும் புகார் ஒன்றினை கொடுத்துள்ளார்களா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் பெத்தநாயக்கன்பாளையம் அரசு மருத்துவமனையில் இருக்கும்போது, போலிசார் என்னிடம் வந்து கையெழுத்து வாங்கிசென்றார்கள் என்றால் சரிதான். போலிசார் என்னிடம் கையெழுத்து வாங்கிய பேப்பரில் என்ன எழுதியிருந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான், நான் மயக்கத்தில் இருந்தபோது என்னிடம் கையெழுத்து வாங்கிச்சென்றார்கள்.

5) போலிசார் என்னிடம் 4 எழுதாத பேப்பரில் கையெழுத்து வாங்கினார்களா என்றால் 3 எழுதாத பேப்பரில் கையெழுத்து வாங்கினார்கள். எதிரிகளிடம் ஓடை சம்பந்தமாக பிரச்சனை இருந்து வருகிறது என்றால் சரிதான். நான் தற்பொழுது நீதிமன்றத்தில் முதல் விசாரணையில் கூறியுள்ள சங்கதிகளைதான் போலிசார் விசாரணையில் சொன்னேன் என்றால் சரிதான்.

6) ஓடை சம்பந்தமாக எனக்கும், எதிரிகளுக்கும் பிரச்சனை இருந்து வருவதால், எனக்கு வேறு விதமாக ஏற்பட்ட காயத்தை வைத்து, எதிரிகளின் மீது ஒரு பொய்யான புகார் ஒன்றினை கொடுத்துள்ளேன் என்றாலும், என்னிடம் புகார் வாக்குமூலம் போலிசார் பெறவில்லை என்றாலும், நானும், எனது மகனும் எதிரிகளை அடித்துவிட்டு,நாங்கள் எதிரிகளின் மீது பொய்யான புகார் ஒன்றை கொடுத்துள்ளோம் என்றாலும், நான் சொன்ன மாதிரி எந்தவொரு சம்பவமும் நடக்கவில்லை என்றாலும், 15 வருடங்களாக எதிரிகள்

எனது பக்கத்து காட்டுக்காரர்களாக இருக்கிறார் என்றும் சொல்லும்பட்சத்தில், அவர்களின் பெயர் எனக்கு தெரிந்திருக்கும் என்றாலும், வழக்கிற்காக தெரியாது என்று பொய்யாக சொல்கிறேன் என்றாலும், எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை.

**முடிவு நேரம்** 01.16

Taken Down by me in Open Court Read over to the Dependant in the presence of the accused and admitted by the Dependant to be correct

ANIS FATHIMA

Digitally signed by ANIS FATHIMA
Date: 2025.10.22 15:12:56 +0530

Judicial Magistrate No.1,
Attur.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
-----
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, ATTUR.

CC / STC. No .. .. **CC. 68/2025**

Deposition of Witness for PW 2
Prosecution
Court

| | | | |
|---|---|---|---|
| Name | : **திரு.பெரியசாமி** | Taluk | : பெத்தநாயக்கன்பாளையம் |
| Father/Husband Name | : த.பெ மாணிக்கம் | Calling | : விவசாயம் |
| Village | : படுவுகாடு | Age | : 41 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 22.10.2025.

1 முதல் 5 எதிரிகள் ஆஜர், எதிரிகளின் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**சாட்சி முன்னிலை. உறுதிமொழி எடுக்கப்பட்டது. முதல் விசாரணை**

**துவக்க நேரம்** 01.17

1) நான் மேற்கண்ட முகவரியில் வசித்து, விவசாய வேலை செய்து வருகிறேன். சாட்சி சரோஜா எனது அம்மா ஆவார். ஆஜர் எதிரிகளை தெரியும். எனது பக்கத்து காட்டுக்காரர்கள் ஆவார்கள்.

2) தேதி, மாதம் நினைவில்லை. சுமார் 1 வருடத்திற்கு முன்பு ஒருநாள் மாலை சுமார் 04.00 மணியளவில் நானும், எனது அம்மா சரோஜாவும் எங்களது தோட்டத்தில் இருந்த தழையை வெட்டிக்கொண்டிருந்தோம்.

3) அப்பொழுது, திரிசங்கும் அவரது மனைவியும் அங்கு வந்து, நாங்க வெட்டும் தழை எங்க காட்டிற்குள் விழக்கூடாது என்று தடுத்து, தேவுடியா பயனே என்று ஆபாசமான வார்த்தையால் பேசினார்கள். அதன்பிறகு, தழைகளை கயிறு கட்டி இழுத்துகொண்டோம்.

அதன்பிறகும், தழைகளை வெட்டக்கூடாது என்று தடுத்து, வரப்பில் இருந்த கற்களை எல்லாம் பெயர்த்து, வரப்பை வெட்டி, இழுத்து கொண்டார்கள்.

4) அதன்பிறகு, நானும், எனது அம்மாவும் ஏன் வரப்பை வெட்டி, இழுக்கிறீர்கள் என்று கேட்டோம். அதற்கு திரிசங்கு, அவரது மனைவி, அப்பா ஆறுமுகம், ஆறுமுகத்தின் மனைவி உருட்டைகட்டையால் என்னையை அடிக்க வந்தார்கள், அதனை தடுக்க வந்த எனது அம்மாவை திரிசங்கு கட்டையால் அடித்துவிட்டார். அதில் எனது அம்மாவிற்கு தலையில் இரத்த காயம் ஏற்பட்டது. எதிரிகள் என்னை அடித்துவிடுவார்கள் என்று பயந்து கொண்டு, வீட்டிற்குள் விட்டு, தாழ் போட்டுவிட்டார். எதிரிகளை வீட்டிற்குள் நுழையாதவாறு எங்க அம்மா தடுத்துக்கொண்டிருந்தார்.

5) அதன்பின்பு கதவு , ஜன்னலை உடைத்து , எனது அம்மாவையும் அடித்துவிட்டார்கள். கதவு, ஜன்னல் உடைக்கும் சத்ததை கேட்டு, வீட்டிற்குள் இருந்த எனது பிள்ளைகள் எல்லாரும் பயந்து, அலறினார்கள். பின்னர், பக்கத்தில் ஆடு மேய்த்து கொண்டிருந்த ஒருவர், 108 ஆம்புலன்ஸிற்கு போன் செய்தார்கள். ஆம்புலன்ஸ் வந்து, எனது அம்மாவை மருத்துவமனைக்கு அழைத்து செல்லும்போது, எதிரிகள் ஆம்புலன்ஸ் செல்லவிடாமல் தடுத்து, உனது அம்மா என்ன செத்தாபோயிட்டாங்க, ஆம்புலன்ஸில் அழைத்து செல்ல, இங்கே இருந்து உங்க அம்மா சாகட்டும் என்று சொல்லி தடுத்தார்கள்.

6) அதன்பின்னர், போலிசார் வந்துதான், காயம்பட்ட எனது அம்மாவை 108 ஆம்புலன்ஸ் மூலம் பெத்தநாயக்கன்பாளையம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகளின் தரப்பில் குறுக்குவிசாரணை**

1) எங்களுக்கும், எதிரிகளுக்கும் இடையே நிலம் எல்லை சம்பந்தமாக பிரச்சனை இருந்து வருகிறது என்றால் சரிதான். எதிரிகளின் காட்டை சர்வேயர் அளக்கும்போது, எங்கள் காட்டிலும் அவர்களின் நிலம் உள்ளது என்று சர்வேயர் அளந்து காட்டியுள்ளார் என்றால் சரிதான். மேற்சொன்ன காரணத்தினால் எங்களுக்கு இடையே பிரச்சனை இருந்து வருகிறது என்றால் சரிதான்.

2) நாங்கள், எதிரிகளிடம் ஓடை செல்வதற்கு பாதை வேண்டி கேட்டுக்கொண்டிருந்தோம் என்றால் சரிதான். போலிசார் சம்பவயிடத்திற்கே வந்தார்கள் என்று சொல்லும்பட்சத்தில், அங்கேயே சம்பவத்தை பற்றி எழுதி, என்னிடம் கையெழுத்து பெற்றுக்கொண்டார்கள் என்றால் சரிதான். எனது முதல் விசாரணையில், எதிரிகள் எங்க வீட்டில் கதவு, ஜன்னல்களை உடைத்ததாக சொல்லியுள்ள பட்சத்தில், அதனை நான் போலிசார் விசாாரணையில் சொன்னேனா என்றால் சொல்லியுள்ளேன்.

3) நான் என்னுடைய முதல் விசாரணையில் கூறியுள்ள சங்கதிகளைதான் போலிசார் விசாரணையிலும் கூறியுள்ளேன் என்றால் சரிதான். அரசு மருத்துவமனையில் எனது தாயாரை விசாரித்த நிலையில், அதன்பிறகு, போலிசார் வந்து, எங்களை விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.

4) நான் சொல்லும் மாதிரி, சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் எந்தவொரு சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், எங்க அம்மாவிற்கு வேறு விதமாக ஏற்பட்ட காயத்தை வைத்து, எங்க அம்மா கொடுத்த பொய்யான புகாருக்கு ஆதரவாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை

**முடிவு நேரம்** 01.37

Taken Down by me in Open Court Read over to the Dependant in the presence of the accused and admitted by the Dependant to be correct

ANIS FATHIMA
Digitally signed by ANIS FATHIMA
Date: 2025.10.22 15:13:15 +0530

Judicial Magistrate No.1,
Attur.

CC 68-2025, Dated: 22.10.2025. Sd/-A.Anis Fathima,